1983 மார்ச் 4]

திரு. என். வரதராஜன் : துணைத் தலைவர் அவர்களே, இது தமிழ் நாட்டினுடைய மிக முக்கியமான ஜனநாயக பிரச்சினையாக இருப்பதால் நாம் கடுமையாக ஆட்சேபணை தெரிவிக்க வேண்டியிருக்கிறது. பலமுறை இந்த சட்டமன்றத்திலே தேர்தல்கள் நடத்தப்படும், இனிமேல் இப்படிப்பட்ட திருத்தச் சட்டம் வராது என்று வாக்குறுதி அளிக்கப்பட்டு, அவை நம்முடைய சட்டமன்ற ரெக்கார்டுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவேதான் இதை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன். சட்ட திருத்தம் வருகிற இப்போதாவது, அடுத்து வருகிற குறைந்த காலத்திற்குள் தேர்தல் நடத்துவதற்கான தேதியை அறிவிப்பதும் விவாதத்தில் வரவேண்டுமென்று வற்புறுத்தி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை அறிமுகம் செய்வதை நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எதிர்க்கின்றேன். பொதுவாக, இன்றைக்கு இருக்கக்கூடிய பல்வேறு பிரச்சினைகளுக்கு ஒரு காரணம் சொல்லப்படுகிறது. உச்ச நீதி மன்றத்தில் வழக்கு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த மாதிரி தாவாக்கள் வராமல் இருப்பதற்கு அனைத்துக் கட்சிகளையும் கூட்டி ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே பேசப்பட்டது. ஆனால், இன்றைக்கு விசாரணையை விரைவுபடுத்துவதற்காக மனுவை தாக்கல் செய்திருக்கிறோம். ஆகவே, உச்ச நீதி

[திரு. ரா. கிருஷ்ணன்] [1983 மார்ச் 4

மன்றத்தில் இது விசாரிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்ட பிறகு தேர்தலை நடத்தலாம் என்று இங்கே சொன்னாலும்கூட, 6 மாதம் இந்தத் தேர்தலைத் தள்ளிப் போடக்கூடிய முறையிலே ஒரு ஏற்பாடாக இந்தத் திருத்தம் வருகிறது. அந்த அளவுக்குக் காலம் தேவை இல்லை. குறுகிய காலத்திற்குள்ளாக தேர்தல் நடத்த வேண்டியது மிக அவசியம். ஏற்கெனவே, வறட்சியின் கொடுமையால் வாடிக் கொண்டிருக்கின்ற தமிழக மக்களுக்குக் குறைந்த பட்சம் ஜனநாயக ரீதியாக............

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே தெரிவித்ததை இதிலேயும் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டமுன்வடிவிலே இருப்பவை பூராவையும், ஆய்வு நிலையிலேதான் ஆராய வேண்டும். இதிலே 3 மாதம் என்று சொல்லப்பட்டிருந்தாலும், விரைவிலே தேர்தலை நடத்துவதற்கு அரசு எல்லா நடவடிக்கை களும் எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : ஒவ்வொரு திருத்தச் சட்டத்தின் போதும் இப்படித்தான் சொல்லப்படுகிறது. இப்படி சொல்லிச் சொல்லியே, பஞ்சாயத்து தேர்தல்களை நடத்தாமல் தள்ளிப் போடுவது இந்த அரசின் ஒரு பெரிய சாதனையாக இருக்கிறது. இந்தச் சாதனையை விட்டுவிட்டு ஜனநாயகபூர்வமாக தேர்தலை நடத்துவது அவசியம். 6 மாதம் தள்ளிப் போடுவது சரியல்ல. ஆகவே, அந்த அடிப்படையில் இதை நான் எதிர்க்கிறேன்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா வாடிக்கையாகக்கொண்டு வரக்கூடிய ஒரு நிலையில் இருக்கிறது. இது ஜனநாயக அமைப் புக்கு புறம்பாக இருக்கிறது. ஏதோ உச்ச நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது என்ற காரணத்தைத் தொடர்ந்து காட்டுவது ஒரு அரசுக்கு நியாயமான கொள்கையாக இருக்க முடியாது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். இன் றைக்கு ஜனநாயக அமைப்பே சீர்குலைக்கப்பட்டிருக்கின்ற நிலை யில் தனி அதிகாரிகளுடைய நிலை என்ன என்பதை கிராமப் புறங்களில் பார்ப்போமானால், மிகப் பின்தங்கிய நிலையில், ஜனநாயக அமைப்பையே தகர்க்கின்றதாக இருக்கின் றது என்பதை அமைச்சர் அவர்களே அறிவார்கள். மக்கள் குழுக்களாக இருந்தாலும், அவைகளும் நல்ல முறையில் இயங்காத ஒரு நிலைமையிருக்கிறது. நாங்களெல்லாம் அபிப் பிராயம் கூறும்போது, பழைய சட்டத்தின் அடிப்படையில் தேர்தலை வைத்து புதிய சட்டத்தை அமுல் நடத்திய பின்னால், அதன்படி தேர்தலை நடத்துவதற்கு அரசுக்கு அதிகாரம் இருந்தும் அதைத் தள்ளி போடுவது என்பது ஜனநாயக அமைப்பைச் சீர் குலைப்பதாக இருக்கும் என்பதை........

1983 மார்ச் 4]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, இவைகளை ஆய்வுக்கு எடுத்துக் கொள்கின்ற நேரத்தில் விரிவாக, விளக்கமாக அவர்கள் பேசினால் நன்றாக இருக்கும். மேலும் ஜனநாயகத்தினுடைய தொட்டிலாக விளங்கக்கூடிய பஞ்சாயத்துத் தேர்தல்களைப் பொறுத்தவரையில் இன்றைக்கு யார் தடை பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், இந்திரா காங்கிரஸ் நண்பர்கள்தான் சுப்ரீம் கோர்ட்டிலே தடை பெற்றிருக்கிறார்கள். ஆகவே, சுப்ரீம் கோர்ட்டிலே தடை பெற்றுவிட்டு, இந்தத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமென்பது எப்படி நியாயமாக இருக்கும்? அப்படிச் சீக்கிரமாக நடத்த வேண்டுமென்று சொன்னால், உடனடியாக நீங்கள் மேல் முறையீடு செய்திருக்கிறீர்களே, அந்த மேல் முறையீட்டை வாபஸ் பெற்றுக்கொள்ளுங்கள்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு கட்சியைக் குறிப்பிட்டுக் கூறினார்கள். இந்திரா காங்கிரஸ்தான் தடையைக் கோரியிருக்கிறது, தடையைப் பெற்றிருக்கின்றது என்று கூறினார்கள். அதை வாபஸ் பெற வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். எங்கள் கட்சியின் சார்பாக. . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் கோர்ட்டில் இருப்பதை வாபஸ் வாங்க வேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அமைச்சர் சொன்னதையே வாபஸ் வாங்கவேண்டுமென்று சொல்கிறார். எப்படி சரி அது?

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, நான் தவறான தகவலை இந்த அவைக்கு கொடுக்கவில்லை. காரணம், அங்கே மேல் முறையீடு செய்திருக்கின்றவரின் பெயர் வெங்கடாசலம் பிள்ளை. அவர் நெமிலி பஞ்சாயத்தினுடைய முன்னாள் தலைவர்; காங்கிரஸ்காரர்; இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்; அவர்தான் மேல் முறையீடு செய்திருக்கிறாரே தவிர வேறு எந்தக் கட்சியிலேயும் அல்ல. ஆகவே, அதை மறுக்கிறாரா என்று நான் கேட்கிறேன்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திற்குச் செல்வது என்பது ஒரு கட்சிதான் செல்ல வேண்டுமென்பது அல்ல; ஒவ்வொரு தனிப்பட்ட நிலைக்கும், தனிப்பட்ட நபருக்கும்கூட உரிமையிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் விளக்கமாகச் சொல்லிவிடுகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஒரு கட்சியினுடைய பெயரை அமைச்சரவர்கள் சொல்லியிருக்கும்பொழுது பதில் சொல்ல வேண்டாமா ? அதற்கு வாய்ப்பு கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பலராமன் அவர்களும் சட்டமன்ற உறுப்பினர்தான். அவர் பேசலாம். திரு. சித்தன் அவர்கள் உட்கார வேண்டும். விளக்கத்தை நான் சொல்லிவிடுகிறேன். திரு. பலராமன் அவர்கள் பேசும்பொழுது, தனிப்பட்ட முறையில் யாரும் போகலாம் என்று சொன்னார்கள். கட்சியில் இருப்பவர்கள், கட்சியை எதிர்த்து தனிப்பட்ட முறையில் போக முடியாது.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு தனி நபருக்கும் ஜனநாயக அமைப்பிலே சட்ட ரீதியாக நியாயத்தின் அடிப்படையில் உரிமை இருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் நேரத்தில் இந்த விவரங்களைச் சொல்லலாம். இந்த இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜிலேயே இதுபோன்ற விளக்கங்களைக் கொடுத்துக் கொண்டிருப்பது சரியாக இருக்க முடியாது என்பதைத்தான் சொல்லுகின்றேன். காரணம், இது ஏன் நிறுத்தப்பட்டிருக்கின்றது, ஏன் தனி அதிகாரிகளை நியமிக்க வேண்டிய ஒரு பொறுப்பிலே நாம் இருக்கிறோம் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். வேண்டுமென்றே, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவோ அல்லது இந்த அரசாங்கத்தின் மீது களங்கத்தைக் கற்பிக்க வேண்டுமென்ற காரணத்திற்காகவோ தயவு செய்து கருத்துக்களைச் சொல்ல வேண்டாமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கூறுவதெல்லாம், இத்தனை சிக்கல்களுக்கு மத்தியிலே இருக்கும்பொழுது பழைய முறைப்படி தேர்தலை நடத்தி, இந்தச் சட்டத்தை அமல் நடத்திய பின்னால் ஏன் புதிய முறையில் தேர்தலை நடத்தக் கூடாது என்பதுதான் என்னுடைய கோரிக்கையும், வேண்டுகோளும் ஆகும். இந்த நிலையில் மாண்புமிகு அமைச்சரவர்களும், அரசும், பழைய நிலையிலேயாகிலும் தேர்தலை விரைவாக நடத்தி, ஜனநாயகத்தைக் காக்க வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசையும், அமைச்சரவர்களையும் நான் கோருகிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டங்களை அறிமுகப்படுத்தும் நேரத்தில், இந்த அவையிலேயே பல தடவைகள் ஆறு மாதங்கள் நீட்டித்துக்

1983 மார்ச் 4] [திரு. சோ. அழகர்சாமி]

கொடுத்தால் போதும், அதற்குள்ளே தேர்தலை நடத்தி விடுவோம் என்று அமைச்சரவர்கள் வாக்குறுதி அளித்தும்கூட, தொடர்ந்து நீடித்துக் கொண்டே போகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது திரு. திருவேங்கடம் அவர்களைத்தான் பேசுவதற்கு அழைப்பதாக இருந்தேன். தாங்கள் கையை உயர்த்தியதும் ஏதோ பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பத்தான் போகிறீர்கள் என்று நினைத்தேன். இப்பொழுது பேச ஆரம்பித்து விட்டீர்கள். திரு. திருவேங்கடம் அவர்கள் பேசி முடிக்கட்டும்.

திரு. சோ. அழகர்சாமி : நான் ஆரம்பித்து விட்டேன். சுருக்கமாக முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சரி முடித்து விடுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : இப்பொழுது நகராட்சிகளிலோ அல்லது ஊராட்சிகளுக்கோ அல்லது ஊராட்சி மன்றங்களுக்கோ தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாததால் எவ்வளவு பணிகள் மோசமாக நடக்கின்றன அல்லது சீராக நடைபெறவில்லை என்பதைப் பற்றியெல்லாம் அதிகமாகச் சொல்வதற்கு இப்பொழுது நேரமில்லை. தொடர்ந்து ஒவ்வொரு முறையும் வாக்குறுதி கொடுக்கிறார்கள். சென்ற தடவை சொல்லும்பொழுது கூட அமைச்சரவர்கள் கட்டாயம் டிசம்பருக்குள் தேர்தல் நடத்தி விடுவோம் என்று சொன்னார்கள். இப்பொழுது அரசியல் காரணம் என்று கூறுகிறார்கள். இப்பொழுது மாநகராட்சித் தேர்தலை நடத்துவதற்கு எந்தவிதமான தடையோ, கோர்ட் தடைவிதிக்கவோ இல்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே நடந்த அனைத்துக் கட்சி தலைவர்களுடைய கூட்டத்திலேயே முடிவெடுக்கப்பட்டது. இருக்கின்ற நிலைமைகளெல்லாம் அனைத்துக் கட்சித் தலைவர்களிடத்திலேயும் சொல்லப்பட்டு, அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். மேல் முறையீடு செய்து, சுப்ரீம் கோர்ட்டிலே, உச்ச நீதிமன்றத்திலே அங்கே தடை பெறும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினால் இவைகளையெல்லாம் சீக்கிரமாக, வெகு வேகமாக முடித்துக் கொண்டு இந்தத் தேர்தலை நடத்தலாம் என்ற முடிவைத்தான் அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி ஏற்றுக்கொண்டுவிட்டு இங்கே வந்து இப்போழுது மாமன்றத்திலே மாற்றுக் கருத்துக்களைச் சொல்வது என்பது சரியாக இருக்க முடியாது. ஆகவே, நாம் உடனடியாக என்னென்ன நடவடிக்கைகளை உச்ச நீதிமன்றத்திலே எடுக்க வேண்

டுமோ, அந்த நடவடிக்கைகளையெல்லாம் உரிய நேரத்தில் எடுத்துக் கொண்டிருக்கின்றோம் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தை இங்கே நாம் கண்டிப்பாக கொண்டு வந்துதான் ஆக வேண்டும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் தான் நாம் இருக்கிறோம். அதைத்தான் நான் விளக்கிக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, இப்பொழுது இதை அனுமதித்துவிட்டு, அதற்குப் பிறகு ஆய்வுக்கு எடுத்துக் கொள் ளும்பொழுது நீங்கள் உங்கள் மேலான கருத்துக்களைத் தெரி விக்குமாறு பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிகள், நகராட்சிகளின் தேர்தல்கள் இந்த கோர்ட் தடையின் காரணமாக நின்றுவிட்டது என்று சொல்வது சரியல்ல.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளுக்கு தேர்தல் நடத்தவேண்டுமென்பது தான் இந்த அரசின் கொள்கை. அதையும்கூட மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த மன்றத்திலே சொல்லி யிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் எந்த நேரத்திலே இந்தத் தேர்தலை வைத்துக்கொள்ளலாம் என்று முடிவு எடுக்கிறார்களோ, அந்த நேரத்திலே நாங்கள் வைத்துக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம் என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே கோர்ட்டிலே தடை இருக்கிறது. அந்தத் தடையை நீக்க நடவடிக்கையை நீங்கள் எடுத்துவிட்டால், கண்டிப்பாக இந்த அரசு தேர்தலை நடத்த தயாராக இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: துணைத் தலைவர் அவர்களே, இதிலே அரசியல் காரணம் இருக்கிறது என்று சொன்னார்கள். இன்றைக்குக் கோர்ட்டிலே தடையிருக்கிறது என்று சொன்னால், அதை வெக்கேட் செய்து துரிதமாக நடவடிக்கை எடுத்து தேர்தலை நடத்தியிருக்கலாம். அதற்காக எந்த ஒரு நடவடிக்கையையும் துரிதமாக எடுப்பதாகத் தெரியவில்லை. எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையில் ரிசர்வேசன், நம்முடைய ஆதி திராவிடர்களுக்கும், பெண்களுக்கும், ஒதுக்கப் படவேண்டும் என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். ஆகவே இதிலே எந்தவித ஆட்சேபணையும் கிடையாது. எனவே இதில் காலதாமதம் செய்வது என்பது ஜனநாயக அமைப்பை, கிராமப் புறத்திலே உள்ள ஊராட்சி, மாநகராட்சி, நகராட்சிகளுக்கு தேர்தல் நடத்தாமல் காலதாமதம் செய்துவருவது முறையாகாது. ஆகவே திரும்பவும் நகராட்சிகளுக்கு தேர்தல் நடத்துவதற்கு காலநீடிப்பு கொடுப்பது என்பதை நான் எங்களுடைய கட்சியின் சார்பிலே எதிர்க்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1983 மார்ச் 4]

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகத்திலே 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராம பஞ்சாயத்துக்கள், 376 ஊராட்சி ஒன்றியங்கள் நூற்றுக்கணக்கான நகராட்சிகள், மற்றும் மாநகராட்சிகள், இவைகளில் எல்லாம் மக்களுடைய பிரதிநிதிகள் இல்லாமல் இன்றைக்கு நடந்துகொண்டு வருகின்றன. கிராமப்புறத்திலே உள்ள ஏழை எளியவர்களுக்கு கிடைக்கவேண்டிய நியாயமான குடிநீர் வசதிகள், சுகாதார வசதிகள், பாதை வசதிகள், மற்றும் விளக்கு வசதிகள் கூட இன்றையதினம் இல்லாமல் இருக்கின்றன. காரணம் மக்களுடைய பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால், கிராமங்கள் எல்லாம் இன்றைக்கு இருண்டு கிடக்கின்றன. நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வழக்கமாக பேரவை கூடுகிறது என்று சொன்னால் அவருடைய தனி அதிகாரிகள் நீடிப்பு மசோதா வரும். இது எல்லோரும் எதிர்பார்த்த ஒன்றுதான். கேட்டால் உச்சநீதிமன்றம், உயர் நீதிமன்றம் என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். தேர்தலை நடத்துவதிலே அவர்களுக்கு அக்கறை இல்லை என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு, இன்றையதினம்கூட வழக்கமாக வருகிற மசோதாதானே, அதற்கு நாம் காலத்திலே சபைக்குச் செல்ல வேண்டுமா என்று நினைத்து சாதாரணமாக வந்ததை நாம் பார்த்தோம். இவைகள் எல்லாம் இந்த கிராம மக்களுடைய.. ....(குறுக்கீடு)—

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தேர்தலை நடத்துவதிலே எங்களுக்கு அக்கறை இல்லை என்று சொன்னார்கள். உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும் என்று எத்தனையோ தடவை தேர்தலுக்கு தேதிகளை இந்த அரசு குறிப்பிட்ட நேரத்திலே எல்லாம் முட்டுக்கட்டைகள் போட்டு, இவைகளை முடக்கி வைக்கின்ற சூழ்நிலையை ஏற்படுத்தினார்கள் என்பது இந்த மன்றத்திற்குத் தெரியும். ஆகவே எங்களைத் பொறுத்தவரையில் தேர்தலை சீக்கிரமாக நடத்தவேண்டுமென்பதுதான். ஆனால் சமீபத்திலே நடந்த தேர்தல்கள் எல்லாம் இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சிகளுக்கு எதிராகப் போய்க்கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, இது மசோதாவை அறிமுகப்படுத்து கின்ற நிகழ்ச்சிதான். இந்த மசோதாவை இந்த மன்றத்திற் குள்ளே நுழைய விடலாமா என்பதுதான் பிரச்னையே தவிர, நுழையவிட்டதற்குப் பிறகு அதனுடைய குணநலன்களைப் பற்றியெல்லாம் பேசலாம். ஆகவே இப்போதே ஆய்வுகளை யெல்லாம் முடித்துவிட்டால், பின்னால் ஆய்வுகள் செய்வதற்கு சரியாக இருக்காது. ஆகவே இப்போது அறிமுகப்படுத்தலாமா வேண்டாமா என்பதுதான் பிரச்னை. ஆய்வுக்கு எடுத்துக்

கொள்ளும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகிற சீரிய கருத்துக்கள் எல்லாம் ஆராய்ந்த பிறகு தக்க முடிவுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் தருவார்கள். எனவே இப்போது விவாதத்தைத் தொடங்கிக்கொண்டு போனால் நாம் முறைகளை மீறுகிற ஒரு தன்மையாகத்தான் இருக்கும். அதோடு காலமும் பாழாகிறது. ஆகவே அறிமுகப் படுத்தவேண்டுமென்ற இந்த நிகழ்ச்சிக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் காரணத்தால்தான் உடனடியாக தேர்தலை நடத்த வேண்டுமென்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். சமீபத்திலே நடந்த தேர்தலின் முடிவு எதிர்க்கட்சிகளுக்குத் தெரியும் என்றார்கள். அதிலே வெற்றி பெற்றிருக்கிறார்கள். அதேபோல் தமிழகத்திலே உள்ள நகராட்சிகளில், ஊராட்சிகளில் நீங்கள் நிற்பீர்களானால், தமிழகத்து மக்களுடைய பெரும்பான்மையான தீர்ப்பைக்கூட நீங்கள் பெறமுடியும். உண்மையிலே உங்களுக்கு இதிலே நம்பிக்கை இருக்குமானால் நீங்கள் தேர்தலை வைத்து, அதைச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம் என்று நீங்கள் சொல்லலாம். எனவே நான் இந்த மசோதாவை ஆரம்பக் கட்டத்திலே திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பாக எதிர்க்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9–20)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பிலே வாழ்த்துக்களையும், ஆசிகளையும் கூறிய திரு. திருவேங்கடம் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். வருகின்ற தேர்தல்களில்—அது ஊராட்சி மன்றத் தேர்தலாக இருந்தாலும், அல்லது எந்தத் தேர்தலாக இருந்தாலும்—அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் தான் வெற்றிபெறும் என்பதை அவர் முன்கூட்டியே தெரிவித்து இருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இங்கே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெறவேண்டுமென்று வாழ்த்தியதாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டதற்கு நன்றி. ஆனால், தமிழ் நாட்டு மக்கள் நல்ல தீர்ப்பை அளிப்பார்கள் என்பதால் நாங்கள் தேர்தலைச் சந்திக்கத் தயார் என்று குறிப்பிட்டேன். நீங்கள் வெற்றி பெற்ற தேர்தல்களில் எந்த அளவிற்குச் சிரமப்பட்டீர்கள்

என்பதை எண்ணிப்பார்த்துத்தான் தேர்தல் நடத்த பயப்படு கிறீர்கள். ஆனால் நாங்கள் தேர்தலைச் சந்திக்கத் தயார் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன் னுள்ள கேள்வி:

''தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக் கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஈ) ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

(சில உறுப்பினர்கள் பேச எழுந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கெனவே உள்ளாட்சிகள் சம்பந்தப்பட்ட இரண்டு சட்ட முன்வடிவுகள் அறிமுகம் செய்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்து தெரிவித்துவிட்டனர். இனி அறிமுகம் செய்ய இருக்கின்ற சட்ட முன்வடிவுகளும் உள்ளாட்சிகள் சம்பந்தப்பட்டவை யாகும். ஒவ்வொரு சட்டமுன்வடிவு அறிமுகம்செய்கின்ற நேரத்தில் ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்தவர்களும் வெவ்வேறு உறுப்பினர்கள் மூலம் அதே கருத்தைத் தான் திரும்பத் திரும்ப சொல்ல நேரிடும். அவையின் நேரம் கருதியும், எல்லா சட்ட முன்வடிவுகளும் ஒரே மாதிரியான நோக்கத்தைக் கொண்டவை யாக இருப்பதாலும், அதிலே தெரிவிக்கப்படுகின்ற கருத்துக் களில் வேறுபாடு இருக்காது என்பதாலும், இந்த அவையில் அவற்றின் மீது 7ஆம் தேதி விவாதம் வர இருக்கின்ற காரணத் தாலும், அப்போது மற்ற எல்லா உறுப்பினர்களும் பேசலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.